www.nammakalvi.com

SURYA®
POWER TO SCORE

# இளமைத் தமிழே

## ஒன்பதாம் வகுப்பு

**திருத்திய பாடத்திட்டத்தின்படி**

- ஆசிரியர் குறிப்பு
- பாடலின் பொருள்
- கற்பவை கற்றபின்
- எளிமையான விளக்கங்கள்
- உயர்சிந்தனை வினா-விடை
- போட்டித்தேர்வை மையமிட்ட வினா-விடை
- தகவல் தொழில்நுட்ப தமிழ்ச்சொற்கள்
- இலக்கணக்குறிப்பு கண்டறிய எளிய வழிகள்
- கூடுதல் வினாக்கள்
- தொகுத்தறி மதிப்பீட்டு வினாத்தாள்
- மனப்பாடப் பகுதிகள்

**இலவசம்**

## வினாத் தொகுப்பு கையேடு

**உரையாசிரியர்கள்:**

**கோ. பாக்கியநாதன்,** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,
தமிழாசிரியர், தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை.

**சி. ஜான் @ மாடசாமி,** எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்.,
ரோஸ்மேரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை.

**வீ. அபிஷேகா கேத்தரின்,** எம்.ஏ., பி.எட்.,
ரோஸ்மேரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை.

**SURYA PUBLICATIONS**®
(A UNIT OF **SHYAMALA** GROUP)
Tirunelveli - Chennai

Price ₹ 220/-

*Published By*
*B. ARUMUGAM*
**SURYA PUBLICATIONS**
*(A unit of* ***Shyamala*** *Group)*

## BANK DETAILS

### TIRUNELVELI ACCOUNT

| | |
|---|---|
| Account Name | : **Surya Publications** |
| Account Number | : **446971431** |
| Bank Name | : **Indian Bank** |
| IFSC Code | : **IDIB000T034** |
| Branch Name | : **Tirunelveli Junction** |

| | |
|---|---|
| Account Name | : **Surya Publications** |
| Account Number | : **510909010051752** |
| Bank Name | : **City Union Bank** |
| IFSC Code | : **CIUB0000230** |
| Branch Name | : **Palayamkottai** |

### CHENNAI ACCOUNT

| | |
|---|---|
| Account Name | : **Sri Ganga Publication** |
| Account Number | : **928507483** |
| Bank Name | : **Indian Bank** |
| IFSC Code | : **IDIB000A031** |
| Branch Name | : **Ashok Nagar** |

| | |
|---|---|
| Account Name | : **Sri Ganga Publication** |
| Account Number | : **512020010022514** |
| Bank Name | : **City Union Bank** |
| IFSC Code | : **CIUB0000230** |
| Branch Name | : **Palayamkottai** |

## SURYA PUBLICATIONS®
(A UNIT OF **SHYAMALA** GROUP)

**Corporate Office :**
No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
**Tirunelveli - 627001.**
Phone : 0462 - 233 8899 / 233 8484
Mobile : 94431 58484 / 95978 39822
Email : suryaguides@yahoo.com

**Registered Office :**
New No. 59, 4th Avenue,
Opp. to Govt. Boys Hr. Sec. School,
Ashok Nagar,
**Chennai - 600 083.**
Phone : 044 - 2474 4484
Mobile : 94421 58484 / 94425 58484
Email : srigangapublications5@gmail.com

**Website : www.suryapublications.in**

# முகவுரை ....

**வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி**
**வாழிய வாழிய வே!**

அன்பு மாணவச் செல்வங்களே!

தாய்மொழியான தமிழ்ப் பாடத்தில் மாணவர்கள் மிக உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றிட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த இளமைத் தமிழே உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களிடம் பொதிந்து கிடக்கும் திறன்களை வெளிக்கொணர்ந்து மேம்படுத்திட உதவும் வகையில் இத்துணைவன் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்துணைவனில் தரப்பட்டுள்ள விடைகளும், பயிற்சிகளும் மாணவ மாணவியர் எளிதாகப் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தங்கள் மொழியாற்றல் திறனை மேம்படுத்திட இத்துணைவன் உறுதுணை புரியும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கு ஏற்ற வகையிலும் இத்துணைவன் வடிவமைக்கப்பட்டுள்ளது. செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம், மொழிப்பயிற்சிகளில் கூடுதல் வினாக்களும் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்திட தமிழாசிரியர்கள் இணைந்து உருவாக்கிய இத்துணைவனை வாங்கிப் பயன்படுத்தும் நீங்கள் அரிய சாதனைகள் படைத்திட வாழ்த்துகிறோம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ் உணர்வு!

அன்புடன்,
**ஆசிரியர் குழுமம்.**

| எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|---|
| ஒன்று | மொழி | **திராவிட மொழிக்குடும்பம்** | 1 |
| | | தமிழோவியம் | 6 |
| | | தமிழ்விடு தூது★ | 11 |
| | | வளரும் செல்வம் | 18 |
| | | தொடர் இலக்கணம் | 20 |
| இரண்டு | இயற்கை, சுற்றுச்சூழல் | **நீரின்றி அமையாது உலகு** | 38 |
| | | பட்டமரம் | 44 |
| | | பெரியபுராணம்★ | 49 |
| | | புறநானூறு★ | 58 |
| | | தண்ணீர் | 64 |
| | | துணைவினைகள் | 68 |
| மூன்று | பண்பாடு | **ஏறுதழுவுதல்** | 79 |
| | | மணிமேகலை | 85 |
| | | அகழாய்வுகள் | 91 |
| | | வல்லினம் மிகும் இடங்கள் | 97 |
| | | திருக்குறள்★ | 106 |
| நான்கு | அறிவியல், தொழில்நுட்பம் | **இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்** | 116 |
| | | ஓ, என் சமகாலத் தோழர்களே!★ | 122 |
| | | உயிர்வகை★ | 126 |
| | | விண்ணையும் சாடுவோம் | 130 |
| | | வல்லினம் மிகா இடங்கள் | 136 |
| ஐந்து | கல்வி | **கல்வியிற் சிறந்த பெண்கள்** | 148 |
| | | குடும்ப விளக்கு | 156 |
| | | சிறுபஞ்சமூலம்★ | 166 |
| | | வீட்டிற்கோர் புத்தகசாலை | 172 |
| | | இடைச்சொல் – உரிச்சொல் | 177 |
| ஆறு | கலை, அழகியல், புதுமைகள் | **சிற்பக்கலை** | 189 |
| | | இராவண காவியம்★ | 196 |
| | | நாச்சியார் திருமொழி | 210 |
| | | செய்தி | 217 |
| | | புணர்ச்சி | 221 |
| | | திருக்குறள் | 230 |

| எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|---|
| ஏழு | நாகரிகம், தொழில், வணிகம், நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | **இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு** | 236 |
| | | சீவக சிந்தாமணி★ | 242 |
| | | முத்தொள்ளாயிரம்★ | 252 |
| | | மதுரைக்காஞ்சி | 260 |
| | | சந்தை | 267 |
| | | ஆகுபெயர் | 273 |
| எட்டு | அறம், தத்துவம், சிந்தனை | **பெரியாரின் சிந்தனைகள்** | 284 |
| | | ஒளியின் அழைப்பு | 291 |
| | | தாவோ தே ஜிங் | 298 |
| | | யசோதர காவியம்★ | 303 |
| | | மகனுக்கு எழுதிய கடிதம் | 307 |
| | | யாப்பிலக்கணம் | 310 |
| ஒன்பது | மனிதம், ஆளுமை | **விரிவாகும் ஆளுமை** | 320 |
| | | அக்கறை★ | 327 |
| | | குறுந்தொகை | 332 |
| | | தாய்மைக்கு வறட்சி இல்லை | 338 |
| | | அணியிலக்கணம் | 341 |
| | | பொதுக் கட்டுரைகள் | 350 |
| | | தொகுத்தறி மதிப்பீடு – தமிழ் முதல் தாள் | 355 |
| | | தொகுத்தறி மதிப்பீடு – தமிழ் இரண்டாம் தாள் | 358 |

# மனப்பாடப் பகுதி

### தமிழ்விடு தூது: சீர்பெற்ற செல்வம்

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் – மண்ணில்
குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்று இனத்தும் உண்டோ – திறம்எல்லாம்
வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்து என்று சொல்லிய நாச்சிந்துமே

### பெரியபுராணம்

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம். – *சேக்கிழார்*

### புறநானூறு

நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே!

– *குடபுலவியனார்*

### திருக்குறள்

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.
எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.
ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

– *திருவள்ளுவர்*

### ஓ, என் சமகாலத் தோழர்களே!

அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகா லன்தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்

ஏவும் திசையில் அம்பைப் போல
இருந்த இனத்தை மாற்றுங்கள்
ஏவு கணையிலும் தமிழை எழுதி
எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.

– *வைரமுத்து*

### உயிர் வகை

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனமே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

– *தொல்காப்பியர்*

**சிறுபஞ்சமூலம்**

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.

*- காரியாசான்*

**திருக்குறள்**

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

*- திருவள்ளுவர்*

**இராவண காவியம்**

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்.

*- புலவர் குழந்தை*

**சீவகசிந்தாமணி**

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

*- திருத்தக்கதேவர்*

**முத்தொள்ளாயிரம்**

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு

**யசோதர காவியம்**

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே

**அக்கறை**

சைக்கிளில் வந்த
தக்காளிக் கூடை சரிந்து
முக்கால் சிவப்பில் உருண்டது
அனைத்துத் திசைகளிலும் பழங்கள்
தலைக்கு மேலே
வேலை இருப்பதாய்க்
கடந்தும் நடந்தும்
அனைவரும் போயினர்
பழங்களை விடவும்
நசுங்கிப் போனது
அடுத்த மனிதர்கள்
மீதான அக்கறை

*- கல்யாண்ஜி*

உரைநடை உலகம்

இயல் ஒன்று

# திராவிடமொழிக் குடும்பம்

## பாடநூல் வினாக்கள்

### குறுவினா

**1. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?**

நான் பேசும் மொழியான தமிழ், தென் திராவிட மொழிகளுள் ஒன்றாக இருக்கிறது.

### சிறுவினா

**1. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

- திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் தென்திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூன்று பிரிவுகளை உடையது.
- மலையாள மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றைக் காட்டும் பாலறி கிளவிகள் இல்லை. தனிச் சொற்களாலேயே ஆண், பெண் பகுப்பை அறிந்து கொள்ள முடியும்.
- தமிழ்மொழி, திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது. இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.

**2. மூன்று என்னும் எண்ணுப் பெயர் பிறதிராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?**

திராவிட மொழிகளில் எண்ணுப் பெயர்கள் ஒன்றுபோலவே அமைந்துள்ளன. மூன்று என்னும் தமிழ் எண்ணுப் பெயர் பிற திராவிட மொழிகளில் பின்வருமாறு அமையும்.

| திராவிட மொழிகள் | தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் | துளு |
|---|---|---|---|---|---|
| மாற்றம் | மூன்று | மூணு | மூடு | மூரு | மூஜி |

### நெடுவினா

**1. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.**

**முன்னுரை :**

திராவிட மொழிகளுள் முதன்மையாக விளங்குவது தமிழ். எத்தகைய காலமாற்றத்திலும் மாறிவரும் புதுமைகளுக்கும் ஈடு கொடுத்து இயங்கும் ஆற்றல் தமிழுக்கு உண்டு. தமிழாய்ந்த அயல்நாட்டவரும் செம்மொழித் தன்மையைத் தரணியெங்கும் எடுத்துரைத்து வருகின்றனர். திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பது பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

www.nammakalvi.com



**திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள் :**

சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல் ஆகும். இதற்கு அடிச்சொல் என்றும் பெயர். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் காணமுடிகிறது.

**சான்று :**

| அடிச்சொல் | திராவிட மொழிகள் |
|---|---|
| கண் | தமிழ் |
| கண்ணு | மலையாளம், கன்னடம் |
| கன்னு | தெலுங்கு, குடகு |

| அடிச்சொல் | திராவிட மொழிகள் |
|---|---|
| ஃகன் | குரூக் |
| கெண் | பர்ஜி |
| கொண் | தோடா |

திராவிட மொழிகளின் எண்ணுப் பெயர்களும் ஒன்று போலவே அமைந்துள்ளன.

**சான்று :**

| **திராவிட மொழிகள்** | தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் | துளு |
|---|---|---|---|---|---|
| **மாற்றம்** | ஒன்று | ஒண்ணு | ஒகடி | ஒந்து | ஒஞ்சி |

திராவிட மொழிகளுள் பிறமொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழே ஆகும். தமிழ் மொழி திராவிட மொழிகள் சிலவற்றின் தாய் மொழியாகக் கருதப்படுகிறது. தமிழின் பல அடிச் சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம் பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளின் வடிவம் மாறியிருக்கின்றன. சுட்டுப்பெயர்களும் மூவிடப் பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.

**நிறைவுரை :**

திராவிட மொழிக்குடும்பத்தின் மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழ், பிற திராவிட மொழிகளை விட ஒப்பியல் ஆய்வுக்குத் துணையாக அமைந்துள்ளது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. இந்திய மொழிக் குடும்ப வகைகள் ............**

அ) 8 ஆ) 18 இ) 6 ஈ) 4

**விடை: ஈ) 4**

**2. பொருந்தாததைத் தேர்ந்தெடு.**

அ) மூன்று - தமிழ்
ஆ) மூணு - மலையாளம்
இ) மூடு - தெலுங்கு
ஈ) மூரு - துளு

**விடை: ஈ) மூரு - துளு**

www.nammakalvi.com



**3. பொருத்துக.**

அ) தெலுங்கு - i) பாரதம்
ஆ) மலையாளம் - ii) கவிராஜ மார்க்கம்
இ) தமிழ் - iii) சங்கஇலக்கியம்
ஈ) கன்னடம் - iv) இராமசரிதம்

1) அ. ii) ஆ. i) இ. iv) ஈ. iii) 2) அ. i) ஆ. iv) இ. iii) ஈ. ii)
3) அ. iv) ஆ. ii) இ. i) ஈ. iii) 4) அ. iii) ஆ. ii) இ. i) ஈ. iv)

விடை: 2) அ.i) ஆ.iv) இ.iii) ஈ.ii)

**4. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்த முதல் அறிஞர் ............**

அ) மாக்சுமுல்லர் ஆ) எமினோ இ) கால்டுவெல் ஈ) பிரான்சிஸ் எல்லிஸ்

**விடை: ஈ) பிரான்சிஸ் எல்லிஸ்**

**5. இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை ............க்கும் மேற்பட்டது.**

அ) 1200 ஆ) 1300 இ) 800 ஈ) 1000

**விடை: ஆ) 1300**

**6. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளோடு மால்தோ, தோடா, கோண்டி முதலான மொழிகள் பற்றிய ஆய்வை மேற்கொண்டவர் ............**

அ) கமில்சுவலபில் ஆ) கால்டுவெல் இ) ஹோக்கன் ஈ) ஆந்திரனோவ்

**விடை: இ) ஹோக்கன்**

**7. 'தமிழியன்' என்று தென்னக மொழிகளை பெயரிட்டு அழைத்தவர் ............**

அ) கால்டுவெல் ஆ) மாக்ஸ்முல்லர் இ) ஸ்டென்கனோ ஈ) ஹோக்கன்

**விடை: ஈ) ஹோக்கன்**

## நிரப்புக

8. மொழிக் குடும்பத்தின் வகைகள் எத்தனை ............ ? **விடை : நான்கு**

9. 'இந்திய நாடு மொழிகளின் காட்சிச் சாலை' யாகத் திகழ்கிறது என்றவர் ............ **விடை : அகத்தியலிங்கம்**

10. 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலின் ஆசிரியர் ............ **விடை : கால்டுவெல்**

11. 'திராவிடம்' என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர் ............ **விடை : குமரிலப்பட்டர்**

12. திராவிட மொழிகள் மொத்தம் ............ **விடை : 28**

13. தமிழ்மொழியின் பழமையான இலக்கண நூல் எது? **விடை : தொல்காப்பியம்**

14. 'லீலாதிலகம்' - எம்மொழியின் பழமையான இலக்கண நூல்? **விடை : மலையாளம்**

## குறுவினா

**1. மொழிக்குடும்பம் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?**

உலகத்திலுள்ள மொழிகளின் பிறப்பு, தொடர்பு, அமைப்பு, உறவு ஆகியவற்றின் அடிப்படையில் மொழிக்குடும்பம் பிரிக்கப்படுகிறது.

**2. திராவிட மொழிகள் பொதுவான அடிச்சொல் பெற்றிருப்பதை விளக்கு.**

சொற்களின் இன்றியமையாப் பகுதி அடிச்சொல் அல்லது வேர்ச்சொல் எனப்படும். திராவிட மொழிகள் பொதுவான அடிச்சொல் பெற்றுள்ளன.

| திராவிட மொழிகள் | தமிழ் | மலையாளம் | தெலுங்கு, குடகு | குருக் | பர்ஜி | தோடா |
|---|---|---|---|---|---|---|
| அடிச்சொல் | கண் | கண்ணு | கன்னு | ஃகன் | கெண் | கொண் |

**3. தென்திராவிட மொழிகள் யாவை?**

தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, கோத்தா, தோடா, கொரகா, இருளா ஆகியவை தென் திராவிட மொழிகள்.

# கூடுதல் வினாக்கள்

## சிறுவினா

**1. தமிழின் தனித்தன்மைகள் யாவை?**

- தொன்மையும் இலக்கண இலக்கிய வளமும் உடையது தமிழ்மொழி.
- இலங்கை, மலேசியா, பர்மா, சிங்கப்பூர், இந்தோனேஷியா போன்ற பல நாடுகளில் பேசப்படும் பெருமையுடையது தமிழ்மொழி.
- தனக்கெனத் தனித்த இலக்கண வளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழி.
- திராவிட மொழிகளில் பிறமொழித் தாக்கம் குறைந்து காணப்படும் மொழி தமிழ்.
- திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகத் திகழ்கிறது தமிழ்.
- ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழ்.
- இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.
- பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணை செய்வது தமிழ்.

www.nammakalvi.com



## கற்பவை கற்றபின்

பக்கம்: 7

**1. உங்கள் பெயருக்கான விளக்கம் தெரியுமா? உங்கள் பெயரும் நண்பர் பெயரும் தனித்தமிழில் அமைந்துள்ளதா? கண்டறிக.**

| | | |
|---|---|---|
| அன்பரசன் | - | அன்புக்கு அரசன் |
| புகழினியன் | - | புகழுக்கு இனியன் |
| அருள்செல்வி | - | அருள் நிறை செல்வி |
| மங்கையர்க்கரசி | - | மங்கையர்களில் அரசி |
| அருள்வளவன் | - | அருளுடை வளவன் |

**2. பயன்பாட்டில் எவ்வாறெல்லாம் தமிழ் மொழியின் வேர்ச்சொற்கள் வடிவமாற்றம் பெறுகின்றன என்பது குறித்துக் கலந்துரையாடுக.**

- தமிழ் மொழியில் ஒரு சொல் விளைவதற்கு வேராக இருப்பது வேர்ச்சொல் எனப்படும்.
- ஒரு சொல், தோன்றுவதற்கு அடியாக இருப்பது அடிச்சொல் எனப்படும்.
- ஒரு சொல்லின் முதலாக அமைவது முதல் நிலை எனப்படும். அதனை இலக்கண நூலார் பகுதி என்று கூறுவர்.

**எ.கா:**

செய் - செய்தாள், செய்கிறாள், செய்வாள், செய்து, செய்த, செய்வீர், செய்கிறோம்.

வா - வந்தான், வருகிறான், வருவான், வந்து, வந்த, வருகிறோம், வருவோம்.

※※⁂⁂⁂※※

www.nammakalvi.com



*கவிதைப் பேழை*

இயல் ஒன்று

# தமிழோவியம்

*ஈரோடு தமிழன்பன்*

## ஆசிரியர் குறிப்பு



திரு. தமிழன்பன்

**திரு. தமிழன்பன்** என்றழைக்கப் பெற்ற செகதீசன் ஈரோடுமாவட்டத்தைச் சேர்ந்தவர். புதுக்கவிதை சிறுகதை முதலான பல வடிவங்களிலும் தமது படைப்புகளை வெளியிட்டுள்ளார். ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் பன்னாட்டு கவிதை வடிவங்களைத் தமிழக்கு அறிமுகம் செய்தவர். இவரது 'வணக்கம் வள்ளுவ' என்னும் கவிதை நூலுக்கு 2004 ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. தமிழன்பன் கவிதைகள் என்னும் தொகுப்பிற்கு தமிழக அரசின் பரிசு கிடைத்தது. இவரது கவிதைகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

### தெளிவுரை :

தமிழ், காலம் தோன்றும் முன் பிறந்தது. எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! அகமும் புறமும் அமைந்த இலக்கியங்களும் அவற்றை விளக்கிச் சொல்லும் இலக்கண நூல்களும் எம்மொழிக்கும் நிகரில்லாக் காப்பியங்களும் அமைந்திருக்கின்றன. அதை நினைத்து நெஞ்சம் மகிழ்ச்சியில் ஊர்வலம் நடத்தட்டும்.

இலக்கிய காலப்பகுதியில் ஏன் இவ்விருண்ட காலம் எனக்கேட்டு நீதியை ஏந்திய தீபமாய் பாட்டுக்கள் இடம் பெறும். இன்னும் மானிட மேன்மையைச் சாதித்துக் காட்டத் திருக்குறள் மட்டுமே போதும். அதைப் படித்து அதற்குத்தக நிற்க வேண்டும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழ்ச் சமயங்களை வளர்த்து வந்தது. சமயங்களும் தமிழை வளர்க்கத் தவறியதில்லை. தாயும் சேயும் போல தமிழும் சமயமும் இருந்தன.

சித்தர் வழித்தோன்றியவர்கள் பகுத்தறிவு ஒளியை நிலத்தில் பாய்ச்சினர்.

விரலை மடக்கிக் கொண்டவன் எழில் வீணையில் இசை தோன்றவில்லை எனச் சொல்வது போல் குறைகளைக் களைந்து விட்டுப் புதுக்கோலம் தழுவட்டும் தமிழ். நாளும் வளர்ப்போம் நற்றமிழை.

### அருஞ்சொற்பொருள் :

| | | |
|---|---|---|
| **அகமாய்** | - | அக இலக்கியங்கள் (நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநூறு, அகநானூறு, கலித்தொகை) |
| **புறமாய்** | - | புற இலக்கியம் (பதிற்றுப்பத்து, புறநானூறு) |
| **அகமாய் புறமாய்** | - | பரிபாடல் |
| **இருட்டு** | - | அறியாமை |

www.nammakalvi.com



**சித்தர்** - ஞான சித்தி பெற்றவர்
**நிகரிலா** - ஈடு இணையில்லா
**ஓதி** - கற்று

## இலக்கணக் குறிப்பு :

பக்கம்: 9

**எத்தனை எத்தனை** - அடுக்குத் தொடர்
**ஏந்தி** - வினையெச்சம்
**நிகரிலாக் காப்பியம்** - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
**விட்டு விட்டு** - அடுக்குத் தொடர்
**காலமும்** - முற்றும்மை

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. வளர்த்தது - வளர் + த் + த் + அ + து**

**வளர்** - பகுதி,
**த்** - சந்தி,
**த்** - இறந்தகால இடைநிலை,
**அ** - சாரியை,
**து** - ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

**2. வளர்ப்பாய் - வளர் + ப் + ப் + ஆய்**

**வளர்** - பகுதி
**ப்** - சந்தி,
**ப்** - எதிர்கால இடைநிலை,
**ஆய்** - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**3. பாய்ந்தன - பாய் + த்(ந்) + த் + அன் + அ**

**பாய்** - பகுதி
**த்(ந்)** - ஆனது விகாரம்
**த்** - இறந்தகால இடைநிலை
**அன்** - சாரியை
**அ** - பெயரெச்சவிகுதி

**4. புனைந்து - புனை + த்(ந்) + த் + உ**

**புனை** - பகுதி,
**த்(ந்)** - ஆனது விகாரம்
**த்** - இறந்தகால இடைநிலை
**உ** - வினையெச்ச விகுதி

# பாடநூல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**1. காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே!**
**காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! ........**
**இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்**

அ) முரண், எதுகை, இரட்டைத் தொடை. ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை..
இ) எதுகை, மோனை, இயைபு. ஈ) மோனை, முரண், அந்தாதி.

**விடை: இ) எதுகை, மோனை, இயைபு.**

www.nammakalvi.com



## குறுவினா

**1. தமிழோவியம் கவிதையில் நும்மை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.**

"மானிட மேன்மையைச் சாதித்திடக் குறள்
மட்டுமே போதுமே ஓதி நட''

மானிடத்தின் மேன்மையைச் சாதனை செய்ய குறள் மட்டுமே போதும் அதைப் படித்து நடக்க வேண்டும்.

**2. ''அகமாய் புறமாய் இலக்கியங்கள் - அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்''**
**இலக்கியங்களின் பாடு பொருளாக இவ்வரிகள் உணர்த்துவன யாவை?**

பழந்தமிழ் இலக்கியங்கள், அகம் புறம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வரிகள், தமிழர்களின் இல்லற வாழ்வைச் சொல்லும் அக இலக்கியங்களையும் போர் வாழ்வைச் சொல்லும் புற இலக்கியங்களையும் உணர்த்துகின்றன.

## சிறுவினா

**1. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?**

- தமிழ் மொழி தொன்மையும் இலக்கண இலக்கிய வளமும் உடையது.
- தமிழ் மொழி ஏனைய திராவிட மொழிகளைவிட தனக்கெனத் தனித்த இலக்கண வளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழியாகும்.
- பிற மொழித் தாக்கம் தமிழில் குறைவு.
- ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைந்த சொல்வளம் பெற்ற மொழி.
- இந்தியாவில் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழில் அமைந்துள்ளன.
- எண்ணற்ற வேர்ச்சொற்களைக் கொண்டு புதுப்புது சொற்களை உருவாக்கி அறிவியல், சமூகம், பண்பாட்டுத் துறைகளில் தன்னை புதுப்பித்துக் கொள்கிறது தமிழ்.

**2. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.**

**முன்னுரை :**

தமிழ்மொழி, இலக்கண இலக்கிய வளம் பெற்று செழித்தோங்கி இருக்கிறது. தமிழானது தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள் முதலிய அறிவுக்கருவூலம் நிறைந்துள்ள தொன்மை சான்ற மொழியாகும். தமிழ்மொழியின் சீர் இளமைத் திறம் வியந்து போற்ற வேண்டும். சங்க காலம் முதல் இக்காலம் வரை தமிழ் புதுக்கோலம் பெற்றுப் புதுப்பொலிவுடன் திகழ்கிறது. அதன் வளர்ச்சிக்கான பங்கினை இக்கட்டுரையில் காண்போம்.

**அறிவியல் தமிழ் :**

தமிழ், தனித்து இயங்கும் ஆற்றல் பெற்ற மொழியாக இருந்து பிற துறைகளோடு இணைந்து வாழும் மொழியாகக் கருதப்படுகிறது. "தமிழன் அறிவியல் முன்னோடி'' என்று கொண்டல் சு.மகாதேவன் நிலை நாட்டுகிறார். ந. சுப்புரெட்டியார், ஜி.ஆர் தாமோதரன், எழுத்தாளர் சுஜாதா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். எதிர்வரும் காலங்களில் என்பங்களிப்பை இதைவிடச் சிறப்பாகச் செய்வேன்.

www.nammakalvi.com



**ஊடகத்துறை :**

நம் நாட்டில் பாராளுமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறையோடு பத்திரிகைத்துறையும் வளர்ந்து வந்திருக்கிறது. இதழியல் தமிழறிஞர்கள் பாரதியார், திரு.வி.க, சி.பா.ஆதித்தனார் வழி என் பங்கையும் அளிப்பேன். வானொலி, தொலைக்காட்சி, இணைய வலைத் தொலைபேசி ஆகியவற்றிற்கான இணையத் தமிழ் அகராதி கண்டுபிடிப்புக்கு முயற்சி செய்வேன்.

**கணிப்பொறி :**

இன்று வளர்ந்து நிற்கும் துறைகளுள் ஒன்று கணினித்துறை. ஆனால் இதில் இன்று வரை ஆங்கிலமே ஆட்சிசெய்து வருகிறது. மின்னணு அஞ்சல், பல்நோக்கு ஊடகம், மக்களை ஆட்சி செய்கிறது. வளர்ந்து வந்துள்ள உயிரோட்ட (Animation) வரைபடங்கள், ஒளிக்காட்சிப் படங்கள் (Vidio Pictures), வரைகலை (Graphies), எழுத்து (Text), ஒலி (Sound) ஆகியவற்றை எடுத்துச் சொல்ல தமிழ்ச் சொற்களைப் புதுப்பொலிவுடன் உருவாக்குவேன்.

**நிறைவுரை :**

**"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்; தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்"** எனும் பாரதியாரின் எண்ணங்களுக்குப் புதுமை வடிவம் தருவேன்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள் ............**

அ) இலங்கை, சிங்கப்பூர் ஆ) அமெரிக்கா, கனடா
இ) பிரான்சு, இங்கிலாந்து ஈ) நார்வே, சுவீடன்

**விடை: அ) இலங்கை, சிங்கப்பூர்**

**2. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடியவர் ............**

அ) பாரதிதாசன் ஆ) நாமக்கல் கவிஞர் இ) கவிமணி ஈ) பாரதியார்

**விடை: ஈ) பாரதியார்**

**3. 'சென்ரியு' என்பது தமிழிலக்கியத்தின் ............ வடிவம்**

அ) கதை ஆ) சிறுகதை இ) கவிதை ஈ) உரைநடை

**விடை: இ) கவிதை**

### நிரப்புக

4. 'நிகரிலாக் காப்பிய பூவனங்கள் உன் நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்' என்றவர் ............

**விடை: ஈரோடு தமிழன்பன்**

5. 2004 ம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெற்ற தமிழன்பன் நூல் ............

**விடை : வணக்கம் வள்ளுவ**

6. புதுக்கவிதை, சிறுகதை என பல படைப்புகளை வெளியிட்டவர் ............

**விடை : தமிழன்பன்**

www.nammakalvi.com



7. புதுப்புது வடிவங்களில் கவிதை நூல் இயற்றியவர் ............ **விடை : தமிழன்பன்**

8. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்' என்று கூறும் நூல் **விடை : பிங்கல நிகண்டு**

9. உலகத் தாய்மொழி நாள் ............ **விடை : பிப்ரவரி 21**

10. 'ஒரு பூவின் மலர்ச்சி, ஒரு குழந்தையின் புன்னகை புரிந்து கொள்ள அகராதி தேவை இல்லை' என்றவர் ............ **விடை : தமிழன்பன்**

## கற்பவை கற்றபின்

பக்கம்: 9

**1 பிறமொழி கலப்பின்றித் தனித்தமிழில் இரண்டு மணித்துளிகள் வகுப்பறையில் பேசுக. பிறமொழிக் கலப்பின்றித் தனித்தமிழில் பேசுதல்:**

அவையோர் அனைவருக்கும் வணக்கம்!

என் உரையைக் கேட்க ஆவலுடன் அமர்ந்திருக்கும் எங்கள் தமிழ் ஐயா! அவர்களே! என் உடன் பயிலும் அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே உங்கள் முன் தனித்தமிழில் உரையாடுவதில் பெருமகிழ்வெய்துகிறேன்.

நான் உரையாற்ற எடுத்துக்கொண்ட தலைப்பே, **"தனித்தமிழ்"** என்பதுதான்.

நாம், நம் அன்றாட வாழ்வில் தமிழ்மொழியைச் சிறிது சிறிதாக மறந்து கொண்டிருக்கிறோம். பிறமொழிச்சொற்களைத் தமிழ்மொழி போலவே பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். உண்பது, பள்ளிக்கு வருவது, கடைக்குச் செல்வது என அனைத்து நிலைகளிலும் நம்மை அறியாமலே பிறமொழிக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறோம். **"மெல்லத் தமிழ் இனி சாகும்"** என்று கவிஞர் வருந்தியது போலவே எனக்கும் வருத்தமாக இருக்கிறது.

அன்பு நண்பர்களே! அனைத்துத் துறை சார்ந்த சொற்கள், கலைச்சொற்கள் மட்டும் அல்ல அனைத்துத் தரவுகளும் நம் அமுதத் தமிழில் வலம்வந்து கொண்டிருக்கிறது.

கணினியைப் பயன்படுத்தும் நாம்...... எப்படித் தமிழைப் பயன்படுத்துவது என தயங்காதீர். அனைத்து கணினி சார்ந்த ஆங்கில வார்த்தைக்கும் செயலி, விரலி, சுட்டி, உலவி...... என தமிழில் சொற்கள் உண்டு.

எனவே, தனித்தமிழ் பயன்படுத்துவோம்! நம் கன்னித்தமிழை வளர்ப்போம்!!

**2. கவிதையைத் தொடர்க.**

அன்னை சொன்ன மொழி
ஆதியில் பிறந்த மொழி
இணையத்தில் இயங்கும் மொழி
ஈடிலாத் தொன்மை மொழி
உலகம் போற்றும் மொழி
ஊர்கூடி வியக்கும் மொழி

எங்கும் நிறைந்த மொழி
ஏறுநடை பயின்ற மொழி
ஒற்றுமை வளர்க்கும் மொழி
ஓங்கி வளர்ந்த மொழி

www.nammakalvi.com



*கவிதைப் பேழை*

இயல் ஒன்று

# தமிழ்விடு தூது

தூது 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தலைவன் ஒருவனைக் கண்டு, காதல் கொண்ட தலைவி ஒருத்தி, தன் காதலையும், பிரிவாற்றாமையையும், வெளிப்படுத்த தலைவனிடத்துத்தூது அனுப்புவதாக பாடப்படுவதே 'தூது' இலக்கியம் ஆகும்.

## தூதின் இலக்கணம்:

**'பயிறருங் கலிவெண் பாவினாலே**
**உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்**
**சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப்**
**பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே'**

என்கிறது இலக்கண விளக்கம்.

அன்னம், மயில், கிளி, குயில், வண்டு, நெஞ்சம், முகில், தென்றல், தமிழ், மான் ஆகிய பத்தினுள் யாதானும் ஒன்றைத் தூதாக அனுப்புவர். 'வாயில் இலக்கியம்', 'சந்து இலக்கியம்' என்னும் வேறு பெயர்களும் இதற்கு உண்டு. தூது இலக்கியம் 'கலிவெண்பா'வால் பாடப்படும்.

## நூல் குறிப்பு :

தமிழ்விடு தூது என்னும் இந்நூல், மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சொக்கநாதரைப் பாட்டுடைத் தலைவராய்க் கொண்ட நூல். சொக்கநாதர் மீது மையல் கொண்ட பெண் ஒருத்தி தமிழைத் தூதுவிடுவதாக பாடப்பட்டுள்ளது. இந்நூல் 268 கண்ணிகளை உடையது. இந்நூலை 1930 ல் தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்கள் முதன் முதலில் பதிப்பித்தார். ஆசிரியர் யார் எனத் தெரியவில்லை.

இரண்டிரண்டு அடிகள் கொண்டு எதுகையால் தொடுக்கப்படுவது கண்ணி ஆகும்.

## தெளிவுரை :

தமிழ், தெளிந்த அமுதாய் அமிழ்தினும் மேலான வீடுபேற்றைத் தரும் கனியாக இருக்கிறது. இயல், இசை, நாடகம் என முத்தமிழாய்ச் சிறந்து விளங்கும் என் தமிழே! உன்னிடம் மகிழ்ந்து கேட்கும் வேண்டுகோள் ஒன்றுள்ளது, நீ அதைக் கேட்பாயாக.

தமிழே! உன்னிடமிருந்து பள்ளு, குறவஞ்சி எனும் நூல்களைப் பாடிப் புலவர்கள் சிறப்படைந்தனர். நீயும் அவற்றை எல்லாம் படிக்கக் கொடுப்பாய் அதனால், தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவினப் பாவினங்களிலும் உறவு உண்டோ?

பாவின் திறம் பொருந்தி நின்று, என்றுமே சிந்தாமணியாய் இருக்கும் உன்னை "சிந்து" என்றழைப்பது உன் பெருமைக்குத் தகுமோ? ஒருவேளை அவ்வாறு கூறிவிட்டால் 'நா' இற்று விழும். வானத்தில் வசிக்கும் தேவர்கள் கூட சத்துவம், இராசசம், தாமசம் ஆகிய முக்குணங்களைப் பெற்றிருக்கிறார்கள். நீயோ பத்துக்குற்றங்கள் இல்லாமல் பத்துக் குணங்களைப் பெற்றுள்ளாய்.

www.nammakalvi.com



மனிதனின் கை வண்ணங்கள் ஐந்திற்கு மேல் இல்லை நீயோ, புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல், துங்கிசை வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டிருக்கிறாய்.

நாவில் தோன்றும் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை. நீயோ, செவிகளுக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய். தமிழை அறியாதவர்க்கு அழகு ஒன்றே ஒன்று. நீயோ எண்வகை வனப்புகளைப் பெற்றுள்ளாய்.

**சொற்பொருள் :**

| | | |
|---|---|---|
| குறம், பள்ளு | - | 96 வகை சிற்றிலக்கியங்களுள் இரண்டு |
| மூன்றினம் | - | பாவகைகளின் பிரிவுகள் தாழிசை, துறை, விருத்தம் |
| சிந்தாமணி | - | 1. சீவகசிந்தாமணி, 2. சிதறாத மணி |
| சிந்து | - | ஒருவகை இசைப்பாடல். யாப்பு வகைகளுள் ஒன்று காவடிச்சிந்து, மூன்று சீர்களில் வரும் செந்தமிழ் நாடென்னும் போதினிலே - இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே - பாரதியார் 'சிந்துக்குத் தந்தை' என்பதைத் தெரிக. |
| முக்குணம் | - | மூன்று குணம் சத்துவம் (அமைதி, மேன்மை) இராசசம் (தீவிரமான செயல், போர்) தாமசம் (சோம்பல், தாழ்மை) |
| வண்ணங்கள் ஐந்து | - | வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை |
| வண்ணம் நூறு | - | குறில், அகவல், தூங்கிசை முதலான இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு |
| ஊனரசம் | - | குறையுடைய சுவை. |
| நவரசம் | - | வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம் நகை, சமநிலை |
| வனப்பு | - | அழகு (அம்மை, தொன்மை, தோல், விருந்து இயைபு, புலன், இழைபு) என எட்டாகும். |

**இலக்கணக் குறிப்பு :**

| | | |
|---|---|---|
| முத்திக்கனி | - | உருவகம் |
| தெள்ளமுது | - | பண்புத்தொகை |
| குற்றமிலா | - | ஈறுகெட்ட எதிர் மறைப்பெயரெச்சம் |
| செவிகள் உணவான | - | நான்காம் வேற்றுமைத்தொகை |
| தெள்ளமுது | - | பண்புத்தொகை |
| நா | - | ஓரெழுத்து ஒருமொழி |
| சிந்தா மணி, அழியா வனப்பு, ஒழியா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

www.nammakalvi.com



**பகுபத உறுப்பிலக்கணம் :**

**1. கொள்வார் - கொள் + வ் + ஆர்**

| | | |
|---|---|---|
| **கொள்** | - | பகுதி, |
| **வ்** | - | எதிர்கால இடைநிலை, |
| **ஆர்** | - | பலர்பால் வினைமுற்று விகுதி |

**2. உணர்ந்த - உணர் + த்(ந்) + த் + அ**

| | | |
|---|---|---|
| **உணர்** | - | பகுதி |
| **த்(ந்)** | - | சந்தி 'ந்' ஆனது விகாரம், |
| **த்** | - | இறந்தகால இடைநிலை, |
| **அ** | - | பெயரெச்ச விகுதி |

**3. சொல்லிய - சொல் + இ(ன்) + ய் + அ**

| | | |
|---|---|---|
| **சொல்** | - | பகுதி, |
| **இன்** | - | இறந்தகால இடைநிலை |
| **ய்** | - | உடம்படு மெய் சந்தி, |
| **அ** | - | பெயரெச்ச விகுதி |

**5. உடையாய் - உடை + ய் + ஆய்**

| | | |
|---|---|---|
| **உடை** | - | பகுதி |
| **ய்** | - | உடன்படு மெய் சந்தி, |
| **ஆய்** | - | முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி |

**4. பெற்றாய் - பெறு(பெற்று) + ஆய்**

| | | |
|---|---|---|
| **பெறு** | - | பகுதி (பெற்று) என ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது |
| **ஆய்** | - | முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி. |

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. தமிழ்விடு தூது ________ என்னும் இலக்கியத்தைச் சார்ந்தது.**

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை

இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

**விடை: இ) சிற்றிலக்கியம்**

**2. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.**

i) ______ இனம் ii) வண்ணம் ______

iii) ______ குணம் iv) வனப்பு ______

அ) மூன்று, நூறு, பத்து, எட்டு ஆ) எட்டு, நூறு, பத்து, மூன்று

இ) பத்து, நூறு, எட்டு, மூன்று ஈ) நூறு, பத்து, எட்டு, மூன்று

**விடை: அ) மூன்று, நூறு, பத்து, எட்டு**

**3. <u>அழியா</u> வனப்பு, <u>ஒழியா</u> வனப்பு <u>சிந்தா</u> மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு**

அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

**விடை : ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

www.nammakalvi.com



## குறுவினா

**1. கண்ணி என்பதன் விளக்கம் யாது?**

இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலையைப் போல செய்யுளில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுளுக்கு கண்ணி என்று பெயர்.

## நெடுவினா

**1. 'தூது அனுப்பத் தமிழே சிறந்தது' - தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.**

**முன்னுரை :**

தொண்ணூற்று ஆறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று தூது ஆகும். வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் என்றும் இதனை அழைப்பர். தலைவர் தலைவியர்களுள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர் பால் அன்பு காட்டுவர். அதற்கு அடையாளமாக மாலை வாங்கி வருமாறு அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகப் பாடுவது ஆகும். இது கலிவெண்பாவால் பாடப்படுவதாகும். தமிழ்விடு தூது, மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண், தன் காதலைக் கூறிவருமாறு தமிழைத் தூது விடுவதாகப் பாடப்படுவதாகும். கலிவெண்பாவால் பாடப்படும். இந்நூல் 268 கண்ணிகளைக் கொண்டது.

**விண்ணப்பம் உண்டு விளம்பக் கேள் :**

தெளிந்த அமுதமாய் அந்த அமிழ்தினும் வீடுபேற்றைத் தரும் கனியே! இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் சிறந்து விளங்கும் தமிழே! அறிவால் உண்ணப்படும் தேனே! உன்னிடம் மகிழ்ந்து விடுக்கும் விண்ணப்பம் ஒன்றுள்ளது அதைக் கேட்பாயாக.

**மூவகைப் பாவினங்களிலும் உறவு உண்டோ?**

தமிழே, உன்னிடமிருந்து குறவஞ்சி, பள்ளு என்ற நூல்களைப் பாடிப் புலவர்கள் சிறப்புப் பெற்றனர். நீயும் படிக்கக் கொடுப்பாய். அதனால் தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவினங்களிலும் உறவு உண்டோ?

**'சிந்து' என்றழைப்பது தகுமோ?**

தமிழ்ப்பாவகை அனைத்தும் பொருந்தி நின்று என்றுமே சிந்தாமணியாய் இருக்கும் உன்னை, சிந்து என்றழைப்பது உன் பெருமைக்குத் தகுமோ? அவ்வாறு கூறிய நா இற்று விழும்.

**பத்துக் குணங்கள் பொருந்திய தமிழே!**

வானத்தில் வசிக்கும் முற்றும் உணர்ந்த தேவர்கள் கூட சத்துவம் (அமைதி) இராசசம் (தீவிரமான குணம்) தாமசம் (சோம்பல்) மூன்று குணங்கள் பெற்றுள்ளார்கள். ஆனால் நீயோ பத்துக் குற்றங்கள் இல்லாமல் செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி எனும் பத்துக் குணங்களைப் பெற்றுள்ளாய்.

**நூறு வண்ணங்கள் கொண்ட வண்டமிழே:**

மனிதர்களால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை (பொன் நிறம்) பசுமை என ஐந்தே. நீயோ, புலவர்கள் தெளிந்த குறில், அகவல், தூங்கிசை, வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய்.

www.nammakalvi.com



**எட்டழகு பெற்ற கட்டழகுத் தமிழே :**

நாவினால் அறியும் சுவைகள் ஆறு. நீயோ, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமனிலை பெற்றுள்ளாய். தமிழை அறியாதவர்களுக்கு அழகு ஒன்றே ஒன்று என்றில்லாமல் அதிகம் உண்டோ? நீயோ நீங்காத அம்மை முதலிய அழகு எட்டினைப் பெற்றுள்ளாய்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. மதுரை சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி பாடுவதாக அமைந்த நூல் ............**

அ) தமிழ்விடு தூது ஆ) தமிழோவியம்

இ) திருக்குற்றால குறவஞ்சி ஈ) முக்கூடற்பள்ளு **விடை : அ) தமிழ்விடு தூது**

**2. தமிழின் வண்ணங்கள் ............**

அ) 20 ஆ) 96 இ) 18 ஈ) 100

**விடை : ஈ) 100**

**3. தமிழ்விடு தூது நூலைப் பதிப்பித்தவர் ............**

அ) பெருஞ்சேரல் இரும்பொறை ஆ) உ.வே.சாமிநாதர்

இ) அடியார்க்கு நல்லார் ஈ) ஆறுமுகநாவலர் **விடை : ஆ) உ.வே.சாமிநாதர்**

**4. பொருந்தாததைத் தேர்ந்தெடு.**

அ) சத்துவம் ஆ) புலம் இ) இராசசம் ஈ) தாமசம்

**விடை : ஆ) புலம்**

**5. தமிழ்விடு தூது நூலின் ஆசிரியர் ............**

அ) பலபட்டடைச் சொக்கநாதர் ஆ) என்னயினாப் புலவர்

இ) சத்திமுத்தப் புலவர் ஈ) எவருமில்லை **விடை : ஈ) எவருமில்லை**

### நிரப்புக

6. இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலை ............

**விடை : கண்ணி**

7. சிந்து என்பது ஒருவகை ............ **விடை : இசைப்பாடல்**

8. சிந்தாமணி என்பதன் பொருள் ............ **விடை : சீவகசிந்தாமணி, சிதறாதமணி**

9. செவிக்கு விருந்தளிக்கும் சுவைகள் ............ **விடை : ஒன்பது**

10. பாவினங்கள் ............ **விடை : மூன்று**

11. தாழிசை, துறை, விருத்தம் என்பவை ............ **விடை : பாவினங்கள்**

12. வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் என்னும் பெயர்களால் அழைக்கப்படுவது ............

**விடை : தூது இலக்கியம்**

www.nammakalvi.com



13. தூது இலக்கியம் பாடப்படும் பாவகை ............ **விடை : கலி வெண்பா**
14. தமிழ்விடு தூது நூலின் பாட்டுடைத் தலைவன் ............ **விடை : மதுரை சொக்கநாதர்**
15. தமிழ்விடு தூது நூலை முதன்முதலில் பதிப்பித்தவர் ............ **விடை : உ.வே.சா**
16. தமிழ்விடு தூது நூலைப் பதிப்பித்த ஆண்டு ............ **விடை : 1930**
17. தமிழ்விடு தூது நூலில் உள்ள கண்ணிகள் .......... **விடை : 268**
18. வனப்பின் வகைகள் .......... **விடை : எட்டு**
19. செறிவு, சமனிலை பத்தும் .......... **விடை : குண அணிகள்**
20. 'தாமசம்' என்பது .......... **விடை : சோம்பல், தாழ்மை**
21. முற்றும் உணர்ந்த தேவர்கள் பெற்றுள்ள குணம் .......... **விடை : மூன்று**

## குறுவினா

**1. எவையெல்லாம் தூதாக அனுப்பப்படும்?**

அன்னம், மயில், கிளி, குயில், வண்டு, நெஞ்சம், முகில், தென்றல், தமிழ், மான் ஆகிய பத்தும் தூதாக அனுப்பப்படும்.

**2. வனப்பு எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

வனப்பு எட்டு வகைப்படும்.

அவை அம்மை அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகும்.

**3. குற்றமிலா பத்துக் குணங்கள் யாவை?**

பத்துக் குணங்களாவன: செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்பவை.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 12

**1. நமது எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எடுத்துரைக்க உதவுவது தமிழ் மொழி என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் உரை ஒன்று எழுதுக.**

**''நண்ணு மிளவைப் பருவத்தி லேமுதல்**
**நாவை யசைத்த மொழி - எங்கள்**
**கண்ணைத் திறந்துல கத்தை விளக்கிக்**
**கருத்தோ டிசைத்த மொழி''**

என்று வரத நஞ்சைய பிள்ளை தமிழின் பெருமையை எடுத்துக் காட்டுகிறார். "இனிமையும் நீர்மையும் தமிழ் எனல்"ஆகும் என்பது புகழ்மொழியாகும். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாரதியார் பாடினார். தமிழ் நம் எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதில் எடுத்துரைக்கத் தக்கதாகும்.

தமிழ் மொழியிலுள்ள சொற்கட்டமைப்பும் வாக்கியக் கட்டுக் கோப்பும் எளிமையாகவும் திறமாகவும் அமைந்துள்ளன. இலக்கணக் கட்டுப்பாடு மொழிக்கு வேலி போன்றது ஆகும். சொற்கள் இலக்கியத்திற்கு என்றும் இலக்கணத்திற்கு என்றும் தனித்தனியே அமைந்துள்ளன.

www.nammakalvi.com



இலக்கியத்திற்கு இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு சொற்களையும் பயன்படுத்துகிறோம். இலக்கணத்திற்குப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் தனியமைப்புப் பயன்பாட்டுக்குரியது.

தமிழ் மொழியின் இனிமையும் எளிமையும் சமயம் பரப்ப தமிழகத்துக்கு வந்த மேனாட்டுக் கிறித்துவ சமயச் சான்றோர்களைக் கவர்ந்தது. அவர்கள் எண்ணங்களையும் கருத்துகளையும் இனிய எளிய தமிழில் எடுத்துரைக்கச் செய்தது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் தேசியத்தை வளர்த்தது. தேசியம் தமிழை எடுத்துக் கொண்டது. கருத்துகளையும் எண்ணங்களையும் எடுத்துச் சொல்ல முடிந்தது. அறிவியல் நுட்பங்களை எடுத்துச் சொல்ல புதுப்புதுச் சொற்களைப் படைத்து அளித்ததனால் சொல்வளம் பெருகியது. தமிழ் கணினிப் பயன்பாட்டிற்கு வந்தவுடன் கணினித் தமிழ் என்ற துறை முகிழ்த்தது.

நமது எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்க மொழி பயன்பட்டது. அம்மொழி வழியே கருத்துகளைப் பிறருக்குப் பகிர்ந்து கொள்ள முடிகிறது.

**2. படித்துத் திரட்டுக.**

**''காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்**
**மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்**
**போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி**
**நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க''**

**- கவியோகி சுத்தானந்த பாரதியார்.**

**இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.**

**இப்பாடல் காட்டும் இலக்கியங்கள்**

குண்டலமும் - குண்டலகேசி
கைக்கு வளையாபதி - வளையாபதி
சிந்தாமணி - சீவக சிந்தாமணி
பொன்முடி சூளாமணி - சூளாமணி
செங்கோலாய்த் திருக்குறள் - திருக்குறள்

| நூல் | குறள் /காப்பியம் | சமயம் | ஆசிரியர் |
|---|---|---|---|
| குண்டலகேசி | ஐம்பெருங்காப்பியம் | பௌத்தம் | நாதகுத்தனார் |
| வளையாபதி | ஐம்பெருங்காப்பியம் | சமணம் | பெயர் தெரிந்திலது |
| சீவக சிந்தாமணி | ஐம்பெருங்காப்பியம் | சமணம் | திருத்தக்க தேவர் |
| சூளாமணி | ஐஞ்சிறு காப்பியம் | சமணம் | தோலாமொழித் தேவர் |
| திருக்குறள் | குறள் | உலகப்பொதுமறை | திருவள்ளுவர் |

www.nammakalvi.com



*விரிவானம்*

# இயல் ஒன்று

# வளரும் செல்வம்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க.**

| குழு 1 | குழு 2 | குழு 3 | குழு 4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |
| ----- | ----- | ----- | ----- |
| **தோணி** | **மர** | **விருத்தம்** | **காரணவினை** |

அ) வங்கம், மானு, தாழிசை, பிறவினை ஆ) தாழிசை, மானு, பிறவினை, வங்கம்

இ) பிறவினை, தாழிசை, மானு, வங்கம் ஈ) மானு, பிறவினை, வங்கம், தாழிசை

**விடை: அ) வங்கம், மானு, தாழிசை, பிறவினை**

### குறுவினா

**1. கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களை தருக.**

i) Moniter - திரை
ii) Mouse - நகர்த்தி (அல்லது) சுட்டி
iii) Keyboard - விசைப்பலகை
iv) CD - குறுந்தட்டு
v) Download - பதிவிறக்கம்
vi) File - கோப்பு
vii) E-Mail - மின்னஞ்சல்

### சிறுவினா

**1. சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?**

சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொற்கள் கிரேக்க மொழியிலும் மாற்றம் பெற்றுள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **தமிழ்** | எறிதிரை | கலன் | நீர் | நாவாய் | தோணி |
| **கிரேக்கம்** | எறுதிரான் | கலயுகோய் | நீரியோஸ் / நீரிய | நாயு | தோணீஸ் |

**2. வளரும் செல்வம் - உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச் சொற்களைத் தொகுத்து அதற்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பிறமொழிச் சொற்கள்** | சாப்ட்வேர் | லேப்டாப் | ப்ரௌசர் | சைபர்ஸ்பேஸ் | சர்வர் |
| **தமிழ்ச் சொற்கள்** | மென் பொருள் | மடிக்கணினி | உலவி | இணையவெளி | வையக விரிவு வலை |

www.nammakalvi.com



# கூடுதல் வினாக்கள்

## குறுவினா

**1. கடற்கலன்களுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**

நாவாய், வங்கம், தோணி, கலம்.

## சிறுவினா

**1. தமிழில் கணினி தொடர்பான சொற்களைப் பட்டியலிடுக.**

- சாப்ட்வேர் - மென்பொருள்
- கர்சர் - ஏவி அல்லது சுட்டி
- க்ராப் - செதுக்கி
- போல்டர் - உறை

**தமிழ் எண்கள் அறிவோம்.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சூ | எ | அ | கூ | க0/ௐ |

**தமிழ் எண்களில் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| பன்னிரண்டு | – கஉ | பதின்மூன்று | – கங |
| நாற்பத்து மூன்று | – சங | எழுபத்தெட்டு | – எஅ |
| தொண்ணூறு | – கூ0 | | |

## கற்பவை கற்றபின்

பக்கம்: 17

**1. நீங்கள் நாள்தோறும் வகுப்பறையில் மிகுதியாகப் பயன்படுத்தும் சொற்களைப் பட்டியலிட்டு, அவற்றில் இடம் பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ் சொற்களை அறிந்து எழுதுக.**

| சொற்பட்டியல் | பிறமொழிச் சொற்கள் | நிகரான தமிழ்ச் சொற்கள் |
|---|---|---|
| வகுப்பு, புத்தகம், பிளாக் போர்டு, பேனா, பென்சில், நோட்டு. | பிளாக் போர்டு (Blackboard) | கரும்பலகை |
| வகுப்பு | கிளாஸ்ரூம் (Classroom) | வகுப்பறை |
| புத்தகம் | புக் (Book) | பாடநூல் |
| பேனா | பென் (Pen) | தூவல் |
| பென்சில் | ப்பென்சில் (Pencil) | கரிக்கோல் |
| நோட்டு | நோட் (Note) | குறிப்பேடு |
| ரப்பர் | எரேஸர் (Eraser) | மென்மம் |

www.nammakalvi.com



**2. உரையாடலை நிறைவு செய்க. அவற்றுள் இடம்பெறும் பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

**அருண்** : ஹலோ! நண்பா!

**நளன்** : வணக்கம் நண்பா..

**அருண்** : உன்னைப் பார்த்துப் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. இல்லையா?

**நளன்** : ஆமாம்! பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன நீ என்ன செய்கிறாய். இப்போது நான் பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் மேலாளராக பணி புரிகிறேன், நீ.....

**அருண்** : நான் நந்தனம் அரசுக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிகிறேன்.

**நளன்** : அந்தக் கல்லூரியில் தான் என் தம்பி வணிகவியல் முதலாமாண்டு படிக்கிறான்.

**அருண்** : மிக்க நன்றி, மீண்டும் சந்திப்போம்.

**நளன்** : மீண்டும் பார்க்கலாம்.

※※⁂⁂⁂※※

*கற்கண்டு*

# இயல் ஒன்று — தொடர் இலக்கணம்

## பாடநூல் வினாக்கள்

### குறுவினா

**1. செய்வினையை, செயப்பாட்டுவினையாக மாற்றும் துணை வினைகள் இரண்டினை சான்றுடன் எழுதுக.**

செய்வினையை, செயப்பாட்டு வினையாக மாற்ற பயன்படும் துணை வினைகள் படு, பெறு ஆகும்.

**2. வீணையோடு வந்தாள், கிளியே பேசு தொடர் வகையைச் சுட்டுக.**

வீணையோடு வந்தாள் - செய்தித் தொடர்; கிளியே பேசு - கட்டளைத் தொடர்

### சிறுவினா

**1. தன்வினை, பிறவினை, காரணவினைகளை எடுத்துக்காட்டுடன் வேறுபடுத்திக் காட்டுக.**

**தன்வினை :**

வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும்.

**எ.கா:** பந்து உருண்டது.

www.nammakalvi.com



**பிறவினை :**

வினையின் பயன் எழுவாயை இல்லாமல் அடையாக வருவது பிறவினை எனப்படும்.

**எ.கா.** பந்தை உருட்டினான்

**காரணவினை :**

எழுவாய் தானே வினையை நிகழ்த்தாமல் வினை நிகழ்வதற்குக் காரணமாக இருப்பது காரணவினை

**எ.கா.** பந்தை உருட்ட வைத்தான்.

| தன்வினை | பிறவினை | காரணவினை |
|---|---|---|
| நட | நடத்து | நடத்தச் செய்தார் |
| அடங்கு திருந்தினான் | அடக்கு திருத்தினான் | அடக்கச் செய்தார் திருந்தச் செய்தான் |
| ஆடினான் | ஆட்டினான் | ஆட்டுவித்தான் / ஆட வைத்தான் |
| மாறுவார் | மாற்றுவார் | மாற்றுவித்தார் / மாறச்செய்தார் |
| செய்தான் | செய்வித்தான் | செய்ய வைத்தான் |
| வா | வருவித்தார் | வரவைத்தார் |
| காண் | காட்டு | காட்டுவி |
| ஆடு | ஆட்டு | ஆட்டுவி |

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. 'நான் வந்தேன்' இதில் வரும் பயனிலை ............**

அ) பெயர்ப் பயனிலை ஆ) வினைப் பயனிலை

இ) உரிப் பயனிலை ஈ) வினா பயனிலை **விடை: ஆ) வினைப் பயனிலை**

**2. 'சொன்னவள் கலா' இதில் வரும் பயனிலை ............**

அ) வினைப் பயனிலை ஆ) வினாப் பயனிலை

இ) இடைப் பயனிலை ஈ) பெயர்ப் பயனிலை **விடை: ஈ) பெயர்ப் பயனிலை**

**3. 'அவன் திருந்தினான்' எவ்வகைத் தொடர்?**

அ) செவினைத் தொடர் ஆ) வினாத்தொடர்

இ) தன்வினைத் தொடர் ஈ) பிறவினைத் தொடர்

**விடை: இ) தன்வினைத் தொடர்**

4. ஒரு சொற்றொடரில் அமையும் வினைச்சொல் ............ ஆகும். **விடை: பயனிலை**

5. எழுவாய் ஒரு வினையைச் செய்ய அடிப்படையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளே ............ ஆகும். **விடை: செயப்படுபொருள்**

www.nammakalvi.com



### பகுபத உறுப்பிலக்கணம்

- பதம் (சொல்) இரு வகைப்படும். அவை பகுபதம், பகாப்பதம் ஆகும்.
- பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும்.
- இது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்.

### பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| **பகுதி** (முதனிலை) | சொல்லின் முதலில் நிற்கும்; பகாப்பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச்சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும். |
| **விகுதி** (இறுதிநிலை) | சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும். |
| **இடைநிலை** | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும். |
| **சந்தி** | பகுதியையும் பிறஉறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். |
| **சாரியை** | பகுதி, விகுதி இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| **விகாரம்** | தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம். |

| **பகுதி** | | |
|---|---|---|
| ஊரன் – ஊர் | பார்த்தான் – பார் | மடித்தார் – மடி |
| நடிகன் – நடி | வரைந்தான் – வரை | மகிழ்ந்தான் – மகிழ் |

| **விகுதி** | | |
|---|---|---|
| படித்தான் | ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி | அன், ஆன் |
| பாடுகிறாள் | ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள் |
| பெற்றார் | ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் |
| நீந்தியது | து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து, று |
| ஓடின | அ – பலவின்பால் வினைமுற்று விகுதி | அ, ஆ |
| சிரிக்கிறேன் | ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் |
| உண்டோம் | ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம், ஆம், எம், ஏம், ஓம் |
| செய்தாய் | ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ |
| பாரீர் | ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர், ஈர் |
| அழகிய, பேசும் | அ, உம் – பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| வந்து, தேடி | உ, இ – வினையெச்ச விகுதிகள் | உ, இ |
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர் |
| முளைத்தல் | தல் – தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு... |

| இடைநிலை | | |
|---|---|---|
| வென்றார் | ற் - இறந்தகால இடைநிலை | த், ட், ற், இன் |
| உயர்கிறான் | கிறு - நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று, ஆநின்று |
| புகுவான், செய்தேன் | வ், க் - எதிர்கால இடைநிலை | ப், வ், க் |
| பறிக்காதீர் | ஆ - எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ |
| மகிழ்ச்சி, அறிஞன் | ச், ஞ் - பெயர் இடைநிலைகள் | ஞ், ந், வ், ச், த் |

| சந்தி | | |
|---|---|---|
| உறுத்தும் | த் - சந்தி | த், ப், க் |
| பொருந்திய | ய் - உடம்படுமெய் சந்தி | ய், வ் |

| சாரியை | | |
|---|---|---|
| நடந்தனன் | அன் - சாரியை | அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் |

**எழுத்துப்பேறு**

- பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும்.
- பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும்.
- சாரியை வரும் இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு.

**எ.கா:**

**1. வந்தனன் - வா(வ)+த்(ந்)+த்+அன்+அன்**

**வா** - பகுதி ('வ' ஆனது விகாரம்)

**த்(ந்)** - சந்தி ('ந்' ஆனது விகாரம்)

**த்** - இறந்தகால இடைநிலை

**அன்** - சாரியை

**அன்** - ஆண்பால் வினைமுற்று விகுதி

**2. செய்யாதே - செய்+ய்+ஆ+த்+ஏ**

**செய்** - பகுதி

**ய்** - சந்தி

**ஆ** - எதிர்மறை இடைநிலை

**த்** - எழுத்துப்பேறு

**ஏ** - முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி

## இன்றியமையாத இலக்கணக் குறிப்புகள்

**1. பெயரெச்சம் :**

வினை முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் எச்சம் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிவது. பெயரெச்சம்

**(எ.கா)** படித்த மாணவன், படித்த ............ (அ) நடந்த (த் + அ) அ என்ற விகுதியுடன் முடியும்.

www.nammakalvi.com



**2. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் :**

ஓர் எதிர்மறைப் பெயரெச்சத்தின் கடைசியில் 'த' கெட்டு விடுவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். இது 'ஆ' என்ற ஓசையுடன் முடியும்.

(அணையாத விளக்கு) (அணையா விளக்கு) அணையா ............. (ஆ) (யா = யா + ஆ)

**3. வினையெச்சம் :**

வினை முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் ஒரு எச்சம் வினைச்சொல்லக் கொண்டு முடிவது. வினையெச்சம். இது "உ" "இ" விகுதிகளுடன் முடியும்.
படித்து முடித்தான் படித்து ............ (ஊ) நடந்து ................ கூறி (த் + உ)

**4. வியங்கோள் வினைமுற்று :**

வாழ்த்துதல், வைதல், வேண்டல் பொருளில் வருவது. காலம் காட்டாது. இது க, இய, இயர் – என்ற விகுதிகளுடன் முடியும்

**(எ.கா)** செல்க, வாழ்க, வாழி, வாழிய, வாழியர்.

**5. வினையாலணையும் பெயர் :**

ஒரு வினைமுற்று வினையைக் குறிக்காமல் வினையைச் செய்த கருத்தாவைக் குறிக்கும் பெயராய் வருவது வினையாலணையும் பெயர். எழுதினான் – எழுதியவன் என வரும். அது அன், ஆன், அர், ஆர், ஒர், நர் ஆகிய ஓசைகளுடன் முடியும்

**(எ.கா)** இழந்தவன், சென்றனர், அனுப்புநர்.

**6. சொல்லிசை அளபெடை :**

மூன்று மாத்திரை அளவில் வினையெச்சப் பொருளில் வரும் அளபெடை இது 'இ' என்று எழுத்துடன் முடியும்.

**(எ.கா)** ஓரீஇ, நம்பெழீஇ, உரனசை இ.

**7. இன்னிசை அளபெடை :**

மூன்று மாத்திரை அளவில் மூன்று அசைச் சொற்களில் அமைவது இன்னிசை அளபெடை

**(எ.கா)** உண்பதூம் (உண்/பதூ/உம்) உடுப்பதூஉம்.

**8. செய்யுளிசை அளபெடை :**

மூன்று மாத்திரை அளவில் இரண்டு அசை சொற்களில் அமைவது செய்யுளிசை அளபெடை

**(எ.கா)** ஆஅதும், கழுஉமணி, படாஅபறை, தொழா அர்.

**9. அடுக்குத் தொடர் :**

அர்த்தமுள்ள சொற்கள் பலமுறை அடுக்கி வருவது

**(எ.கா)** எண்ண எண்ண, பலப்பல, தீ தீ தீ

**10. இரட்டைக் கிளவி :**

அர்த்தமுள்ள சொற்கள் வினையைச் சிறப்பிக்க இரட்டையாக மட்டும் அமைவது.

**(எ.கா)** மடமட, சலசல.

**11. ஒரு பொருட் பன்மொழி :**

ஒரே பொருள் தரும் இரண்டு சொற்களுடன் அமைவது ஒரு பொருட் பன்மொழி.

**(எ.கா)** தீயழல், நடுமையம், ஒரு தனி.

www.nammakalvi.com



**12. பண்புத் தொகை :**

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் மை மறைந்திருப்பது.

**(எ.கா)** சிற்றில் (சிறுமை + இல்) பைந்தமிழ் = (பழமை + தமிழ்), செங்கோல் = (செம்மை + கோல்).

**13. வினைத் தொகை :**

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் காலம் காட்டும் இடைநிலை கின்ற மறைந்திருப்பது.

**(எ.கா)** தொடுகடல் (தொடுகின்ற கடல்)

**14. உவமைத் தொகை :**

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் 'போன்ற' அல்லது 'போல' உவமஉருபு மறைந்திருப்பது.

**(எ.கா)** பவளவாய் (பவளம் போன்ற வாய்)

**15. வேற்றுமைத் தொகை :**

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் வேற்றுமை உருபுகளில் (ஐ, ஆல், இன், கு, அது, கண்) ஏதேனும் ஒன்று மறைந்திருப்பது.

**(எ.கா)** கூலி வேலை (கூலிக்கு வேலை).

**16. உம்மைத் தொகை :**

இணைந்த தொகைச் சொல்லை விரித்தால் இடையில் "உம்" மறைந்திருப்பது

**(எ.கா)** செடி கொடிகள் (செடிகளும், கொடிகளும் என்பதில் உம் மறைந்தது).

**17. எண்ணும்மை :**

உம்மைத் தொகையைப் போல் உம் மறையாமல் எண்ணிக்கை காண்பதற்காக வெளிப்படையாக இருப்பது எண்ணும்மை

**(எ.கா)** கற்பும் காதலும் (உம் - வெளிப்படை)

**18. அன்மொழித் தொகை :**

ஆகுபெயர் போல் ஒரு தொகைச் சொல் வேறு அல்லாத ஒன்றைக் குறிப்பது அன்மொழித் தொகை

**(எ.கா)** செந்தாமரை (பண்புத் தொகை) செந்தாமரை வந்தாள் (அன்மொழித் தொகை)

**19. உருவகம் :**

உம்மைத் தொகையை முன் பின்னாக மாற்றுவது உருவகம். இது, உவமையைப் பொருள் மேல் ஏற்று இடையில் ஆகிய என்ற சொல் மறைந்து வரும்.

**(எ.கா)** மதிமுகம் (மதி போன்ற முகம் - உவமைத் தொகை) முகமதி (முகமாகிய மதி உருவகம்)

**20. தன்மை பன்மை வினைமுற்று :**

அம் ஓம் என்ற விகுதிகளுடன் முடிவது

**(எ.கா)** போற்றுதும்.

www.nammakalvi.com



**21. செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று :**

செய்யும் என்ற சொல்லைப் போன்றே தொனிப்பது

**(எ.கா)** படும்.

**22. செயின் என்னும் வாய்ப்பாடு வினைமுற்று :**

செயின் என்ற சொல்லைப் போன்றே தொளிப்பது.

**(எ.கா)** பெறின்.

**23. ஆகுபெயர் :**

ஒன்றின் இயற்பெயர் மற்றொன்றுக்கு ஆகி வருவது.

**(எ.கா)** உலகு (உலக மக்களைக் குறிக்கும்) ஊர் சிரித்தது.

**24. தொழிற்பெயர் :**

ஒரு தொழிலைக் குறிக்கும் பெயர், காலம் காட்டாது. இது தல், அல், கை, மை, ஐ, சி, பு என்ற விகுதிகளுடன் அமையும்.

**(எ.கா)** பாடுதல், பாடல், ஆட்டம், வீற்றிருக்கை, கொல்லாமை, எஞ்சாமை.

**25. முதல் நிலை திரிந்த தொழிற்பெயர் :**

ஒரு தொழிற்பெயரின் விகுதி கெட்டு, முதல் எழுத்தும் மாறி ஒலிப்பது

**(எ.கா)** கெடுதல்.

கெடுதல் → கெடு → கேடு

பெறுதல் → பெறு → பேறு

**26. இலக்கணப் போலி :**

ஓர் இலக்கண அமைப்புடைய சொல்லுக்கு போலியாக அமைவது

**(எ.கா)** தசை (சதை)

**27. எழுத்துப் போலி :**

ஒரு சொல்லில் எழுத்து மாறினாலும் பொருள் மாறாது. இது முதல், இடை, கடைசியில் அமையும். முற்றிலும் மாறுபட்டு அமையும்.

**(எ.கா)** நலன் (நலம்) கடைப்போலி, அஞ்சு (ஐந்து) முற்றுப்போலி

**28. உரிச் சொல் தொடர் :**

தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாத, சால, உறு, தவ, நனி, கூர், கழி, வான், மா, தட, வை, மழு, கடி போன்ற சொற்கள் வேறு ஒரு சொல்லுடன் உரிமை பெற்றுத் தொடர்ந்து வருவது இது அதன் பண்பை விளக்கும்.

**(எ.கா)** மாநாடு, உறுபசி, சாலப் பேசினான்.

**29. மரூஉச் சொல் :**

காலப்போக்கில் மருவி மாறி வருபவை

**(எ.கா)** எந்தை (என் தந்தை) பேர் (பெயர்)

**30. இடைக்குறை விகாரம் :**

ஒரு சொல்லின் இடையில் ஓர் எழுத்து குறைந்து மாறுபட்டாலும் அதே பொருளைத் தருவது

**(எ.கா)** உளம் (உள்ளம்) கணீர் (கண்ணீர்),

**31. இரு பெயரொட்டுப் பண்புத் தொகை :**

இரு சொற்களில் முதல் சொல் சிறப்புப் பெயராகவும் அடுத்துள்ள சொல் பொதுப் பெயராகவும் இருப்பது.

**(எ.கா)** தமிழ்மொழி, இமயமலை.

**32. தன்மை ஒருமை வினைமுற்று :**

என், ஏன் என்ற விகுதிகளுடன் முடிவது.

**(எ.கா)** கொள்வேன்.

**33. முற்றெச்சம் :**

ஒரு வினைமுற்றுச் சொல் வினையெச்சப் பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடியும்.

**(எ.கா)** படித்தனன் தேறினான்.

## கற்பவை கற்றபின் — பக்கம்: 23

**1. தொடர்களை மாற்றி உருவாக்குக.**

**அ) பதவியை விட்டு நீக்கினான்.** *(இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)*

பதவியை விட்டு நீக்குவித்தான்.

**ஆ) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர்.** *(இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)*

மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர்.

**இ) உண்ணப்படும் தமிழ்த்தேனே.** *(இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக)*

உண்ணும் தமிழ்த்தேனே.

**ஈ) திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாக பகுத்துள்ளனர்.** *(இத்தொடரை செயப்பாட்டு வினைத் தொடராக மாற்றுக)*

திராவிட மொழிகள் மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

**உ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார்.** *(இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக)*

நிலவன் சிறந்த பள்ளியில் படிப்பித்தான்.

**2. சொற்களைத் தொடர்களாக மாற்றுக :**

**அ) மொழிபெயர்** *(தன்வினை, பிறவினை தொடர்களாக மாற்றுக)*

மொழி பெயர்த்தாள் - தன்வினை　　　மொழி பெயர்ப்பித்தாள் - பிறவினை

**ஆ) பதிவுசெய்** *(செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக மாற்றுக)*
பதிவு செய்தான் - செய்வினை    பதிவு செய்யப்பட்டது - செயப்பாட்டுவினை

**இ) பயன்படுத்து** *(தன்வினை, பிறவினைத் தொடர்களாக மாற்றுக)*
பயன்படுத்துவித்தான் -பிறவினை    பயன்படுத்தினான் - தன்வினை

**ஈ) இயங்கு** *(செய்வினை, செயப்பாட்டு வினை தொடர்களாக மாற்றுக)*
இயங்கினாள் - செய்வினை    இயக்கப்பட்டாள் - செயப்பாட்டுவினை

**3. பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக.**

(தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களைக், நம்மை, வாழ்வியல் அறிவை)

அ) தமிழ் செவ்விலக்கியங்களைக் கொண்டுள்ளது.

ஆ) நாம் தமிழிலக்கிய நூல்களை வாங்க வேண்டும்

இ) புத்தகங்கள் வாழ்வியல் அறிவைக் கொடுக்கின்றன.

ஈ) நல்ல நூல்கள் நம்மை நல்வழிப்படுத்துகின்றன.

**4. பொருத்தமான பெயரடைகளை எழுதுக.**

(நல்ல, பெரிய, இனிய, கொடிய)

அ) எல்லோருக்கும் இனிய வணக்கம்.

ஆ) அவன் நல்ல நண்பனாக இருக்கிறான்.

இ) பெரிய ஓவியமாக வரைந்து வா.

ஈ) கொடிய விலங்கிடம் பழகாதே.

**5. பொருத்தமான வினையடைகளைத் தேர்வுசெய்க.**

(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)

அ) ஊர்தி மெதுவாகச் சென்றது.

ஆ) காலம் வேகமாக ஓடுகிறது.

இ) சங்க இலக்கியம் வாழ்க்கையை அழகாகக் காட்டுகிறது.

ஈ) இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் பொதுவாகக் காட்டு.

**6. அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.**

**அ) நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். *(வினாத்தொடராக எழுதுக)***
நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினரா? (அல்லது)
இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தியவர் யார்?

**ஆ) இசையின்றி அமையாது பாடல். *(உடன்பாட்டுத் தொடராக அமைக்க)***
இசையோடு அமையும் பாடல்

**இ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? *(கட்டளைத் தொடராக மாற்றுக)***
நீ இதைச் செய்.

www.nammakalvi.com



**7. வேர்ச்சொல்லை வைத்துச் சொற்றொடர்களை உருவாக்குக.**

**அ) தா** *(உடன்பாட்டு வினைத்தொடர், பிறவினைத் தொடர் ஆக்குக)*

தந்தேன் - உடன்பாட்டு வினைத்தொடர்

தருவித்தேன் - பிறவினைத் தொடர்

**ஆ) கேள்** *(வினாத்தொடர் ஆக்குக)*

கேட்டாயா? - வினாத் தொடர்

**இ) கொடு** *(செய்தித் தொடர், கட்டளைத் தொடர் ஆக்குக)*

நீ அதைக் கொடு - செய்தித் தொடர்

நீ கொடு - கட்டளைத் தொடர்

**ஈ) பார்** *(செய்வினைத் தொடர், செயப்பாட்டு வினைத் தொடர், பிறவினைத் தொடர் ஆக்குக)*

பார்த்தான் - செய்வினைத் தொடர்

பார்க்கப்பட்டான் - செயப்பாட்டு வினைத் தொடர்

பார்க்கச் செய்தான் - பிறவினைத் தொடர்

**8. சிந்தனை வினா**

**கீழ்க்காணும் சொற்றொடர்கள் சரியானவையா? விளக்கம் தருக.**

**அ)** அவை யாவும் இருக்கின்றன - தவறு (அவை - பன்மை; யாவும் - ஒருமை)

அவை யாவையும் இருக்கின்றன. - சரி (அவை - பன்மை; யாவையும் - பன்மை)

அவை யாவும் எடுங்கள் - தவறு (அவை யாவும் எடு என்பதே சரி)
அவை - பன்மை, யாவும் - ஒருமை, எடு - ஒருமை

அவை யாவையும் எடுங்கள் - தவறு (அவை யாவையும் எடு என்பதே சரி)
அவை - பன்மை, யாவையும் - பன்மை, எடு - ஒருமை

அவை யாவற்றையும் எடுங்கள் - சரி (அவை - பன்மை, யாவற்றையும் - பன்மை)

**ஆ) நீங்கள் ஒரு நாளிதழில் பணிபுரிகிறீர்கள். அங்குப் புதிய வார இதழ் ஒன்று தொடங்க விருக்கிறார்கள். அதற்காக அந்நாளிதழில் விளம்பரம் தருவதற்குப் பொருத்தமான சொற்றொடர்களை வடிவமைத்து எழுதுக.**

**"தென்றல்" புதிய வார இதழ் வெளியீடு - நாளிதழ் விளம்பரம்**

**தென்றல் - வார இதழ்**

தமிழக இதழியல் வரலாற்றில் புதுத் திருப்பம்

**தமிழ் இலக்கிய முன்னோடிகளின்**

கட்டுரைகள், கவிதைகள், பேட்டி, விளையாட்டுச் செய்திகள், விளம்பரங்கள்.

**முகவர்கள் அணுகவும்: 94434 19040**
**சென்னை, மதுரை, கோவை, திருச்சி.**

பதிப்புகள், படைப்புகள், துணுக்குகள் அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், தென்றல் வார இதழ், 10, வாலாஜா பேட்டை, சென்னை 1.

www.nammakalvi.com



**இ) சொற்றொடர் வகைகளை அறிந்து, அவை எவ்வாறு பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படுகின்றன என்பதைப் பதிவு செய்க.**

சொற்றொடர் வகைகளை சரிவர அறிந்தால் தால் தான் பிழையின்றிப் பேசவும் மரபு மாறாமல் எழுதுவதற்கும் பயன்படுகின்றன.

| வகைகள் | பயன்பாடு |
|---|---|
| வா - ஒரு சொல் தொடர் | வா - கட்டளைத் தொடராக |
| வந்தான் - வினைமுற்றுத் தொடர் | வந்த - பள்ளிக்கு வந்த மாணவன் |
| வரச்சொன்னான் - வினையெச்சத் தொடர் | வந்து - பள்ளிக்கு வந்து சென்ற மாணவன் |
| வாவா - அடுக்குத் தொடர் | வரச்சொன்னான் - அவன் தான் வரச்சொன்னான் |
| வந்த மாணவன் - பெயரெச்சத் தொடர் | வருக வருக என வரவேற்றான் |

**ஈ) வந்திருப்பவர்கள் அனைவரும் இருக்கையில் அமருமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இத்தொடர் ஆங்கிலத்திலிருந்து நேரடியான தமிழ் மொழிபெயர்ப்பாக இருந்தாலும் மொழி மரபை இத்தொடரில் பேணுகிறோமா?**

வந்திருப்பவர் அனைவரும் இருக்கையில் அமருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இத்தொடரில் "கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்" என்பது ஆங்கிலத்தின் நேரடி மொழி பெயர்ப்பு.

இதைக் கேட்டுக்கொள்கிறோம் – என்ற தொடரில் எழுதுவதுதான் சிறந்தது. இதேபோன்று, வருகையைத் தரமுடியாது. ஆனாலும் அழைப்பிதழ்களிலும் மேடை நாகரிகம் கருதி "வருகை தர வேண்டுகிறோம்" என்று எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். நம்மொழி மரபைப் பேணவில்லை. மொழி நடை முறையைப் பின்பற்றுகிறோம்.

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 27

**1. படித்துச் சுவைக்க :**

விறகுநான்; வண்டமிழே! உன்னருள் வாய்த்த
பிறகுநான் வீணையாய்ப் போனேன்; - சிறகுநான்
சின்னதாய்க் கொண்டதொரு சிற்றீசல்; செந்தமிழே!
நின்னால் விமானமானேன் நான்!
தருவாய் நிழல்தான் தருவாய்; நிதம்என்
வருவாய் எனநீ வருவாய்; - ஒருவாய்
உணவாய் உளதமிழே! ஒர்ந்தேன்; நீ பாட்டுக்
கணவாய் வழிவரும் காற்று! - கவிஞர் வாலி

**2. மொழி பெயர்க்க :**

1. Linguistics - மொழியியல்
2. Literature - இலக்கியம்
3. Philologist - மொழி ஆய்வறிஞர்
4. Polyglot - பன்மொழி அறிஞர்
5. Phonologist - ஒலியியல் ஆய்வறிஞர்
6. Phonetics - ஒலியியல்

www.nammakalvi.com



**3. அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.**

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் திகழ்கின்றது. (திகழ்)
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் கலந்து கொள்வாள். (கலந்துகொள்)
3. உலகில் மூவாயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. (பேசு)
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா சென்றார்கள். (செல்)
5. தவறுகளைத் திருத்தினான். (திருத்து)

**4. வடிவம் மாற்றுக.**

**பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம் பெறும் அறிவிப்பாக மாற்றுக.**

மருதூர் அரசு மேனிலைப் பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப்பணியை வழங்கி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த ‘உள்ளங்கை உலகம்’ என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜூன் திங்கள், பிற்பகல் 3:00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் இன்சுவை நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள, அனைவரையும் அழைக்கின்றோம்.

## அறிவிப்பு

### நூல் வெளியீட்டு விழா

| | | |
|---|---|---|
| இடம் | : | வெள்ளி விழா அரங்கம், அரசு மேனிலைப் பள்ளி, மருதூர். |
| நாள் | : | திருவள்ளுவர் ஆண்டு 2049 ஆனிமாதம் 7 ஆம் நாள் (21.06.2018) |
| முன்னிலை | : | பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர், திருமிகு. மலரவன் அவர்கள் |
| தலைமை | : | பள்ளித் தலைமை ஆசிரியர் திருமிகு. முஸ்தபா, M.A., M.Ed., அவர்கள், |
| வரவேற்புரை | : | இலக்கிய மன்றச் செயலர் |
| சிறப்புரை | : | கின்னஸ் சாதனை படைத்த முன்னாள் மாணவர் கவிஞர். இன்சுவை |
| நூல் வெளியீடு | : | பூங்குழலி படைத்த “உள்ளங்கை உலகம்” |
| நன்றியுரை | : | ரா. அன்பரசன், பள்ளி மாணவர் தலைவர். |

அனைவரும் வருக! அமுதச் சுவை பருக!!

**5. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.** பக்கம்: 28

1. இளமையில் கல்வி முதுமையில் இன்பம்
2. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
3. கல்லாடம் படித்தவரோடு சொல்லாடாதே
4. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

www.nammakalvi.com



**6. கடிதம் எழுதுக.**

**உங்கள் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராம கிருஷ்ணனின், 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.**

விருதுநகர்,
28.03.2018

அன்புள்ள நண்பன் எழிலனுக்கு,

பாலன் எழுதிக் கொள்வது. இங்கு நான், என் குடும்பத்தினர் அனைவரும் நலம், அதுபோல நீயும் உன் குடும்பத்தினர் அனைவரும் இறையருளால் நலமுடன் இருப்பீர்கள்.

உன் பள்ளியில் திருப்புதல் தேர்வு, தேர்வுகளுக்கான பயிற்சி எல்லாம் நிறைவு பெற்றுவிட்டதா?

எழிலன்...... இந்த கடிதத்தின் நோக்கம் என்ன தெரியுமா? என் பிறந்தநாளை கடந்த மாதம் 7.2.18 அன்று கொண்டாடும்போது நீ எனக்கு ஒரு பரிசுப்பொருள் தந்தாய் அல்லவா? சென்ற வாரம் ஞாயிற்றுக்கிழமை ஓய்வாக இருந்தபோது பரிசுப்பொருளைப் பிரித்து வியந்துபோனேன்.

எஸ்.இராமகிருஷ்ணன் அவர்கள், எழுதிய "கால்முளைத்த கதைகள்" புத்தகம் பார்த்தவுடன் மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

இந்நூலை கற்று நான் அறிந்துகொண்ட கருத்துகள், உலகம் எப்படித் தோன்றியது என்ற கேள்விக்கு இக்கதைகள் வியப்பான பதில்களைத் தருகின்றன. இந்தக் கதைகளைச் சொன்ன மனிதர்கள் குகைகளில் வசித்தார்கள். இருட்டைக் கண்டு பயந்துபோய் அதையொரு கதையாக்கினார்கள். கதைகள் பாறைகள் உருவத்தினுள் ஒளிந்திருப்பதாக நம்பினார்கள். பலநூறு வருடங்கள் கடந்துவிட்டபோதும் இந்தக் கதைகள் கூழாங்கற்களைப்போல வசீகரமாகியிருக்கின்றன.

சிறுவர்களுக்கான கதைகள், உலகமெங்கும் உள்ள முப்பது பழங்குடியினர்கள் சொன்ன கதைகளிலிருந்து தேர்வு செய்து இத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கதையும் ஒரு நீதியை எடுத்துக் கூறுவதாய் அமைந்துள்ளது. படித்துப் பேணிப் பாதுகாக்க வேண்டிய அரிய பொக்கிஷமாய் திகழ்கிறது அந்நூல். நன்றி நண்பா! நன்கு படி. சிறப்பாக தேர்வுகள் எழுத வாழ்த்துகள்.

அன்புடன்,
பாலன்.

முகவரி:
அ. எழிலன், த/பெ மதியரசன்,
1/3, கூலமாட வீதி, கோவை.

**7. நயம் பாராட்டுக :**

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத் தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில் புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,

www.nammakalvi.com



அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே! - ம.இலெ. தங்கப்பா

## இலக்கிய நயம் பாராட்டுதல்

**ஆசிரியர் முன்னுரை :**

ம.இலெ.தங்கப்பா ஓர் இயற்கைக் கவிஞர் பாரதியாரின் 'குயில்பாட்டு' போல பாடியிருக்கிறார்.பாட்டு என்பது இசையுடன் தொடர்பு கொண்டது. அப்போது தான் பாட்டு உயிர் பெறுகிறது. அத்தகைய உயிர்ப்பை இப்பாடலில் காண முடிகிறது.

**திரண்ட கருத்து :**

நெடுவானம், கடற்பரப்பு, பெருமலை, பள்ளத்தாக்கு, பொழிகின்ற, புனலருவி அழகில், காட்டில், புல்வெளியில், நல் வயலில், விலங்கில், பறவைகளில் இன்னும் தெரிகின்ற பொருள்களில். எல்லாம் பயின்று எம் நெஞ்சில் தெவிட்டாத நுண்பாட்டே! மக்கள் மனத்திலும் நீ குடியிருக்க வேண்டும். தூய்மை ஊற்றே, அழகு என்னும் பெருமை கொண்ட ஒழுங்கே மக்கள் மனத்தில் நீ குடியிருக்க வேண்டுவேன்.

**எதுகை நயம் :**

இப்பாடலில் எதுகை நயம் அழகுற அமைந்து விளங்குகிறது எனலாம். அடிதோறும், சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை நயம் ஆகும்.

**சீர் எதுகை :**

பொழிகின்ற பொழிலில்
புல்வெளியில் நல்வயலில்

**மோனை நயம் :**

அடிதோறும், சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை நயம் ஆகும்.

| | | |
|---|---|---|
| **வி**ரிகின்ற | - | **வி**ண்ணோங்கு |
| **பொ**ழிகின்ற | - | **பு**னலருவி பொழிலில் |
| **தெ**ரிகின்ற | - | **தி**கழ்ந்து |
| **தெ**விட்டாத | - | **தூ**ய்மை |
| **அ**ழகு | - | **அ**கத்திலும் |

**சொல் நயம் :**

கவிஞர், நுண்பாட்டு என்ற சொல்லில் 'நுட்பமான பாட்டு' என்றே குறிப்பிடுகிறார். பாட்டுக்கு, 'அழகு என்னும் பேரொழுங்கு' என்ற அடை கொடுத்துப் பாடுகிறார்.

**பொருள் நயம் :**

விண்ணோங்கு, புனலருவிப் பொழில், தெவிட்டாத நுண்பாட்டே என்று பொருள் நயம் புலப்படப் பாடுகிறார்.

**நிறைவுரை :**

இயற்கையை வருணிப்பதில் தலை சிறந்து விளங்கும் ம.இலெ.தங்கப்பாவை 'அழகியல் கவிஞர்' என்று கூறினால் அது மிகையாது.

**8. நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க :**

உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழா சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.

**தமிழ் இலக்கிய மன்றம்**
**அரசு மேனிலைப் பள்ளி, திருவாரூர் - 5**

**உலகத் தாய்மொழி நாள் விழா**

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| **நாள்** | : | திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம், மாசி மாதம் 9ம் தேதி **(பிப்ரவரி 21)** |
| **தமிழ்த்தாய் வாழ்த்து** | : | |
| **வரவேற்புரை** | : | ச.பூங்குன்றன், இலக்கிய மன்றச் செயலர் |
| **தலைமை** | : | திரு. ப. எழில்முதல்வன், தலைமை ஆசிரியர். |
| **முன்னிலை** | : | திரு. அன்பரசன், தலைவர், முன்னாள் மாணவர் கழகம். |
| **சிறப்புரை** | : | முனைவர். சுப. அண்ணாமலை,<br>தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை-7. |
| **நன்றியுரை** | : | செ. பூவிழி, 9ஆம் வகுப்பு மாணவி. |
| **நாட்டுப்பண்** | | |

**அனைவரும் வருக! தமிழமுது பருக!!**

## மொழியோடு விளையாடு

பக்கம்: 28

**1. அந்தாதிச் சொற்களை உருவாக்குக.**

**அத்தி, குருவி, விருது, இனிப்பு, வரிசையாக**

**எ.கா: அ) குருவி ஆ) விருது இ) இனிப்பு ஈ) வரிசையாக**

| | | | | |
|---|---|---|---|---|
| அத்தி | வியர்வை | துவர்ப்பு | புகழ்ச்சி | கல்வி |
| திகைப்பு | வைகாசி | புனுகு | சிகப்பு | விருந்து |
| புகழ்ச்சி | சிறப்பு | குருவி | புதுமை | துடுக்கு |
| சிரிப்பு | புலமை | வியப்பு | மைந்தா | குரங்கு |
| புன்னகை | மைசூரு | புகுந்து | தாவி | குத்து |
| கைபேசி | ரூபாவதி | துயில்... | விருப்பு | துதி |
| சிறப்பு | திங்கள் ... | | புகழ்... | தித்திப்பு... |
| புதுமை | | | | |
| மைனா... | | | | |

**2. அகராதியில் காண்க.**

நயவாமை - விரும்பாமை

கிளத்தல் - எழுப்பல், சொல்லுதல், பேசுதல்

கேழ்பு - நன்மை

புரிசை - மதில்

செம்மல் - அரசன், அருகன், தலைமகன், பழம்பூ, புதல்வன், பெருமையிற் சிறந்தோம், உள்ளநிறைவு, நீர், தருக்கு.

www.nammakalvi.com



3. கொடுக்கப்பட்ட வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி விடுபட்ட கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க.

| வா | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் |
| நான் | **வந்தேன்** | வருகின்றேன் | **வருவேன்** |
| நாங்கள் | வந்தோம் | வருகின்றோம் | வருவோம் |
| நீ | வந்தாய் | **வருகிறாய்** | வருவாய் |
| நீங்கள் | **வந்தீர்கள்** | வருகிறீர்கள் | வருவார்கள் |
| அவன் | வந்தான் | **வருகிறான்** | வருவான் |
| அவள் | வந்தாள் | வருகிறாள் | வருவாள் |
| அது | வந்தது | வருகிறது | **வரும்** |
| அவர் | **வந்தார்** | வருகிறார் | வருவார் |
| அவர்கள் | வந்தார்கள் | வருகிறார்கள் | வருவார்கள் |
| அவை | வந்தவை | **வருகின்றன** | வருபவை |

4. தா, காண், பெறு, நீந்து, பாடு, கொடு போன்ற வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி மேற்கண்ட கட்டத்தினைப் போன்று காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை அமைத்து எழுதுக.

| வேர்ச்சொல் | இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் |
|---|---|---|---|
| தா | தந்தேன் | தருகிறேன் | தருவேன் |
| காண் | கண்டேன் | காண்கிறேன் | காண்பேன் |
| பெறு | பெற்றேன் | பெறுகிறேன் | பெறுவேன் |
| நீந்து | நீந்தினேன் | நீந்துகிறேன் | நீந்துவேன் |
| பாடு | பாடினேன் | பாடுகிறேன் | பாடுவேன் |
| கொடு | கொடுத்தேன் | கொடுக்கிறேன் | கொடுப்பேன் |

5. அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு எழுவாய், வினை அடி, வினைக்குப் பொருத்தமான தொடர் அமைக்க. (திடலில், போட்டியில், மழையில், வேகமாக, மண்ணை)

**எ.கா:** நான் திடலில் ஓடினேன். **(தன்வினை)**
நான் திடலில் மிதிவண்டியை ஓட்டினேன். **(பிறவினை)**

| எழுவாய்/பெயர் | வினைஅடி | தன் வினை | பிறவினை |
|---|---|---|---|
| காவியா | வரை | | |
| கவிதை | நனை | | |
| இலை | அசை | | |
| மழை | சேர் | | |

www.nammakalvi.com



**காவியா - வரை**

காவியா போட்டியில் வரைந்தாள். **(தன்வினை)**

காவியா போட்டியில் ஓவியத்தை வரைவித்தாள். **(பிறவினை)**

**கவிதை - நனை**

கவிதை மழையில் நனைந்தேன். **(தன்வினை)**

இரகு கவிதை மழையில் நனைவித்தான். **(பிறவினை)**

**இலை - அசை**

இலை வேகமாக அசைந்தது. **(தன்வினை)**


காற்று இலையை வேகமாக அசைவித்தது. **(பிறவினை)**

**மழை - சேர்**

மழை மண்ணை சேர்ந்தது. **(தன்வினை)**

மழைநீரை மண்ணில் சேர்த்தான். **(பிறவினை)**


**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



மனிதர்களே,
பத்தோடு பதினொன்றாக வாழாதீர்.......
இக்கரைக்கு அக்கரை பச்சை யென்று
வேதாந்தம் பேசி மூச்சு முட்டி வாழாதீர்......
சவாலை சந்தியுங்கள் சுதந்திரக் காற்றை சுவாசியுங்கள்
"வாய்ப்புகளை நழுவ விடாதீர்"

## செயல்திட்டம்

**நீங்கள் வாழும் பகுதியில் மக்கள் பேசும் மொழிகளைப் பட்டியலிட்டு அம்மொழி பேசப்படுகின்ற இடங்களை நிலப்படத்தில் வண்ணமிட்டுக் காட்டுக.**



www.nammakalvi.com



**உங்களுடைய நாட்குறிப்பில் இடம் பெற்ற ஒருவாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.**

| | |
|---|---|
| திங்கள் | வருத்தம் தெரிவிக்கிறேன். பொறுத்துக் கொள்ளவும் ஆகிய சொற்றொடர்களை இன்று இரண்டு முறை வகுப்பில் பயன்படுத்தினேன். இதனால் புதிய நண்பர் கிடைத்தார். |
| செவ்வாய் | நீ தேர்வில் வெற்றிபெற்றதற்கு வாழ்த்து - நண்பன் என்னைப் பாராட்டினான். |
| புதன் | வகுப்பில் கேட்பாரற்றுக் கிடந்த ரூ 500ஐ எடுத்து உரியவரிடம் கொடுத்தேன் - தலைமை ஆசிரியர் பாராட்டினார் |
| வியாழன் | தெருவில் கிடந்த பணப்பையைக் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் - உரியவர் என்னையும் குடும்பத்தையும் பாராட்டினார். |
| வெள்ளி | வீட்டிற்குத் தேவையான பொருள்களை நானாக முன்வந்து வாங்கிக் கொடுத்தேன் - அம்மா பாராட்டினார். |
| சனி | மாற்றுத் திறனாளி சாலையைக் கடக்க உதவினேன் - பொதுமக்கள் பாராட்டினர். |
| ஞாயிறு | நூலகத்தில் படியில் தள்ளாடிய பெரியவரை கைப்பிடித்து வழி நடத்தினேன் - பெரியவர் பாராட்டினார். |

## கலைச்சொல் அறிவோம்

உருபன் - Morpheme
ஒலியன் - Phoneme
ஒப்பிலக்கணம் - Comparative Grammar
பேரகராதி - Lexicon